**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : SC. No. 3/ 2009.
Miscellaneous :
Preliminary Register :
Sessions :
Deposition of witness for Prosecution அ.சா. 1
Defence
Court
Name : திரு. உறனீபா என்ற நாகூர் உறனீபா.
Father's/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 18th August 2021.

**முதல் விசாரணை:**

நான் தற்போது, திருநெல்வேலி, மேலப்பாளையத்தில் குடியிருக்கிறேன். இந்த வழக்கு சமயத்தின்போது, தென்காசியில் குடியிருந்தேன். நான் தற்போது, ஆட்டோ ஓட்டுநராக பணி செய்கிறேன். நான் எந்த இயக்கத்திலும் உறுப்பினராக இல்லை. தென்காசியில் குமார் என்பவர் கடந்த 17.12.2006 இல் அவர் கொலையுண்டு இறந்துபோனார். அது சம்பந்தமாக, போலிசார் என்னையும், அப்துல்லா என்பரையும் குற்றவாளியாக சேர்த்திருந்தார்கள். அந்த வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளியே வந்தேன். வெளியே வந்து, தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் 1 நாளைக்கு 3 நேரங்களாக காவல் நிலையத்தில் அஜராகி கையொப்பம் செய்யவேண்டுமென உத்தரவாகியிருந்தது. கடந்த 14.08.2007 இல் மகளிர் காவல் நிலையத்திற்கு சென்று நானும் அப்துல்லாவும்

கையொப்பம் செய்துவிட்டு,திரும்பி நாங்களிருவரும் வீட்டிற்கு செல்வதற்காக ஆட்டோவில் வந்தோம். தென்காசியில் கூலக் கடை பஜாரில் வரும்போது, எங்களை ஒரு கும்பல் வழிமறித்து தாக்கினார்கள். எந்த நிலையில் தாக்கினார்கள் என்று தெரியாது. என்ன ஆயுதம் கொண்டு தாக்கினார்கள் என்று தெரியாது. பின்னாடி இருந்து தாக்கினார்கள். எனக்கு பின் தலையில் இரத்தம் வந்தது. நான் அங்கிருந்து தப்பித்து ஓடிவிட்டேன். என் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். பின்னர், போலிசார் சம்பவத்திற்கு 2 நாட்கள் கழித்து என்னை வீட்டில் வந்து கைதுசெய்தார்கள். என்னை தென்காசி நீதிமன்ற நடுவர் இல்லத்திற்கு கூட்டிச்சென்று, என்னை ரிமாண்ட் செய்து, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பினார்கள். பின்னர், எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பினார்கள். சிகிச்கைக்குப் பின்னர், என்னை சிறையில் அடைத்து, சிறைக்குள் வைத்தும் மருத்துவ சிகிச்சை அளித்தார்கள். சிறையில் நீதிமன்றக் காவலில் துல்லியமாகத் தெரியவில்லை. சுமார் 8 முதல் 9 மாதங்கள் சிறையிலிருந்தேன். பின்பு, பிணையில் வெளியில்வந்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் யாரும் என்னை எதுவும் விசாரிக்கவில்லை. போலிசாரிடம் இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் சொல்லவில்லை. இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகளில் என்னை தாக்கிய நபர்களோ அல்லது கும்பலாக வந்தவர்களோ இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகள் இல்லை.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 18.08.2007 தேதியில் சேரன்மாதேவி துணை கண்காணிப்பாளர் வழக்கு சம்பந்தமாக விசாரித்தார் என்றும், அந்த விசாரணையின்போது, எங்கள் ஊரில் அம்மன் சந்நிதி பஜாரில் பள்ளிவாசல் கட்ட ஏற்பாடுகள் செய்தார்கள் என்றும், அதைக் கட்டவிடாமல் தென்காசி இந்து முன்னணி தலைவராக இருந்த குமார் பாண்டியன் தடுத்து வந்தார் என்றும், பாபர் மசூதி இடிப்பு தினமாக டிசம்பர் 6 ஆம் தேதி, இந்து எழுச்சி நாள் என்று சொல்ல மக்களுக்கு இனிப்பு வழங்கினார் என்றும், அதனால் எங்களது த.மு.மு.க அமப்பினரும், முஸ்லீம் முக்கிய பிரமுகர்களும் சேர்ந்து என்ன செய்வது என்று பேசினார்கள் என்றும், குமார் பாண்டியனை காலிசெய்ய திட்டமிட்டு, 17.12.2006 ஆம் தேதி நானும், முருகேசன் என்ற அப்துல்லா, செய்யது சுலைமான் ஆகிய 3 பேரும் சேர்ந்து வெட்டிக் கொலை செய்தார்கள் என்றும், குமார் பாண்டியன் கொலை வழக்கில் உறனீபா

மற்றும் நானும், முருகேசன் என்ற அப்துல்லாவும் ஜாமீனில் வெளியேவந்து, தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் கையொப்பமிட்டு வந்தோம். கையொப்பம் போட போகும்போது, எங்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எங்களுக்கு பாதுகாப்பாக பைக் மற்றும் ஆட்டோக்களில் வருவார்கள் என்றும், 14.08.2007 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் வழக்கம்போல, கையொப்பம் போட்டுவிட்டு, என் தம்பி அலாவுதீன் டி.என்.72. எக்ஸ். 0558 என்ற மோட்டார் சைக்கிளில் முன்னால் செல்ல, அவனைத் தொடர்ந்து பின்னால் நாங்கள் டி.என்.76. வி. 9529, டி.என்.76. பி. 4974 என்ற ஆட்டோக்களில் வந்துகொண்டிருந்தோம் என்றும், டி.என்.76. பி. 4974 என்ற ஆட்டோவினை நான் ஓட்டிக்கொண்டு வந்தேன் என்றும், காலை சுமார் 10.15 மணிக்கு தென்காசி எல்.ஆர். எஸ். பாளையம், கூலைக்கடை பஜாரின் சந்திப்பைக் கடந்து, மேல்முத்தாராம்மன் கோவிலுக்கு தென்புறம் கிழக்குப் பார்த்துப் போனோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. அப்போது, மலையான் தெரு, சொர்ணத்தேவர் மகன் சக்திபாண்டியன் என்பவர் டி.என். 72. இசட். 9757 என்ற வெள்ளை நிற அம்பாசிடர் காரில் அவருடைய தம்பி, அவருடைய மைத்துனர் சுப்பிரமணியன், பிரகாஷ் மகன் சுரேந்தர், கபிலன் ஆகியோர்கள் ஏற்றிக்கொண்டு கிழக்கிலிருந்து மேற்காக மேற்படி காரை சக்தி பாண்டியன் ஓட்டிக்கொண்டு வந்து, என் தம்பி ஓட்டிப்போன மோட்டார் சைக்கிளின் மீது மோதி வழிமறித்தார்கள் என்றும் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. பின் ஆளுக்கொரு அரிவாளுடன் காரிலிருந்து இறங்கியும், சக்தி பாண்டின் வெட்டுங்கள், கொல்லுங்கள் என்று எங்களை நோக்கி ஓடிவரவும், நாங்கள் பைக் மற்றும் ஆட்டோக்களை அப்படியே விட்டு, பயத்தில் மேற்காக ஓடினோம் என்றும், அப்போது முத்தாரம்மன் கோவில் பக்கம் இருக்கும் VTSR குடோன் சந்திலிருந்து எங்களுடைய ஆட்களும் வந்து எங்களுடன்சேர்ந்துகொண்டார்க் என்றும், அப்போ சேகர் என் தலையிலும், கையிலும் வெட்டினான் என்றும், கேபிள் டி.வி. முத்து அரிவாளால் என் தம்பி அலாவுதீனின் தலையில் வெட்டினான் என்றும், மேலும் அவன் மீரான் மைதீனின் வலது மார்பிலும் வெட்டினான் என்றும், சுரேஷ் அரிவாளால் முகமது பசீர் மற்றும் செய்யது அலியையும் மாறி, மாறி வெட்டினான் என்றும், தங்கதுரை அரிவாளால் ராஜா முகம்மது வெட்டினான் என்றும், அலெக்சாண்டர் அரிவாளால் நாகூர் மீரான், அசன் கனி ஆகியோர்களை வெட்டினான் என்றும், தென்காசி மலையான் தெரு, வள்ளிநாயகம் மகன் சண்முகம் இரும்பு பட்டையால் முருகேசன் என்ற அப்துல்லாவின்

தலையிலும், முகத்திலும் மாறி, மாறி அடித்தான் என்றும், அப்போது நாங்களும் அவர்களை திருப்பித் தாக்கினோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. இந்த சம்பவத்தல் காயம்பட்ட நான் அங்கிருந்து நான் என் ஆட்டோவில்ஏறி, ஓட்டிக்கொண்டு, கீழப்புலியூர் ரயில்வே ஸ்டேசன் மேற்புறம் வந்தும், அங்குள்ள பள்ளிக்கூடம் பக்கம் என் ஆட்டோவை நிறுத்திவிட்டு, நான் மத்தளம்பாறைக்கு சென்று, இரவு தங்கினேன் என்றும், இந்த சமம்பவத்தில் எங்களைச் சேர்ந்த அசன் கனி, நாகூர் மீரான், பசீர் என்ற முகம்மது பசீர் ஆகிய 3 பேர்களும் இறந்துவிட்டார்கள் என்றும், அதேபோல குமார் பாண்டியனின் சகோதரர்கள் செந்தில், சுரேஷ், சேகர் ஆகியோர்களும் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. இந்த வழக்கு சம்பந்மாக 18.08.2007 ஆம் தேதி காலை 08.15 மணியளவில் சக்தி பாண்டியன் கொடுத்துள்ள புகாரின்பேரில், கீழப்புலியூர் ரயில்வே ஸ்டேசன் கீழ்புறம் உள்ள ரோட்டில் வைத்து, போலிசார் என்னை கைது செய்தாகள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக என் தம்பி அலாவுதீனும் ஒரு புகார் கொடுத்தார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. இவ்வழக்கில் நாங்கள் இருதரப்பிலும் உடன்படிக்கை செய்துகொண்டு, காவல்துறை வழக்கினை தகர்க்கும் வகையில் மறைத்து, நடந்த சம்பவங்களை மறைத்து பொய்யாக நான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>14 மற்றும் 16 எதிரகள் தரப்பிலான வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை</u>:

கடந்த 14.08.2007 ஆம் தேதி சம்பவம் நடந்தது என்றால் சரிதான். 14.08.2007 இல் நான் வீட்டிலிருக்கும்போதுதான் காவல்துறையினர் என்னை விசாரணைக்கு அழைத்துச் சொன்றார்கள் என்றால் சரிதான். அப்போது சுமார் மதியம் 12 மணியிருக்கும். போலிசார், என்னிடம் காவல் நிலையத்தில் எழுதாத வெள்ளைத் தாளில்வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் அன்றைய தினமே போலிசார்என்னை விசாரணைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும், எழுதாத வெள்ளைத் தாளில்வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும், 14 பூமாரி மற்றும் 16 கபிலன் ஆகிய எதிரிகளைத் தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்திலிருந்து இன்றுவரை காவல்துறையினர் அடையாள அணிவகுப்பு

நடத்தவில்லை என்றால் சரிதான். சம்பவத்திலிருந்து, இன்றுவரை போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**1 முதல் 4, 6 முதல் 11, 13, 15 மற்றும் 17 முதல் 19 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:- இல்லை.**

**5 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: - இல்லை.**

**12 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: - இல்லை.**

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம்,

மதுரை.